சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுகலை தமிழ் (M.A.) பயிலும் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு ரூ.6,12,000/-க்கு நிதியொப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை

அரசாணை (ப) எண்.121 நாள் 24.11.2021

பிலவ, கார்த்திகை-8

திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 202, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (தவ 1.2) துறை, நாள்: 20.09.2018.
2. அரசாணை (ப) எண்.42, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (தவ1.2) துறை, நாள். 12.03.2020.
3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.4105/வ.செ.2/2021, நாள். 14.07.2021.
4. அரசாணை (ப) எண்.84, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ1.1)த் துறை, நாள். 12.08.2021.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப்பட்டுவரும் முதுகலை தமிழ் (M.A.) முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், தெரிவின் அடிப்படையில் 30 மாணவர்களுக்கு திங்கள்தோறும் கல்வி உதவித் தொகையாக ரூ.2,000/- வழங்கும் திட்டத்திற்காக தொடர் செலவினமாக ஆண்டொன்றுக்கு ரூ.7.20 இலட்சம் ஒதுக்கீடு செய்தும் 2018-2019-ஆம் நிதியாண்டில் ரூ.3,60,000/-க்கு நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

2) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், 2021-22 நிதியாண்டின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுகலை இரண்டாமாண்டு பயிலும் 13 மாணவர்களுக்கும், முதலாமாண்டு சேர்க்கைக்கு அனுமதிக்கப்படும் 15 மாணவர்கள் என மொத்தம் 28 மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது என்றும், இதற்கு தேவைப்படும் தொகையின் விவரம் பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | முதலாமாண்டு (2020-21ஆம் ஆண்டின் தொடர்ச்சி) (2021 ஏப்ரல் - 2021 சூன் - ரூ.2000x13x3 திங்கள்) | ரூ. 78,000 |
| 2 | இரண்டாமாண்டு (2021-22) (2021 சூலை - 2022 மார்ச்சு - ரூ.2000x13x9 திங்கள்) | ரூ.2,34,000 |
| 3 | முதலாமாண்டு (2021-22) (2021 சூன் - 2022 மார்ச்சு - ரூ.2000x15x10 திங்கள்) | ரூ.3,00,000 |
| | மொத்தம் | ரூ.6,12,000 |

3) மேலும், சட்டப் பேரவை விதி எண். 110இன் கீழ் அறிவிக்கப்பட்டவாறு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் முதுகலை பயிலும் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்க தொடர்ச்செலவின வகைப்பாட்டில் 2021-22ஆம் நிதியாண்டிற்கு தேவைப்படும் தொகை ரூ.6,12,000/-ஐ (ரூபாய் ஆறு இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்) அரசுக்கு பரிந்துரைத்து பெற்று வழங்கிடுமாறு உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

4) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் அவர்களின் செயற்குறிப்பின் அடிப்படையிலான தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவிற்கு, 2021-2022-ஆம் நிதியாண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு முதலாமாண்டு (2020-2021-ஆம் ஆண்டின் தொடர்ச்சி) பயிலும் 13 மாணவர்களுக்கு (ஏப்ரல் 2021 முதல் சூன் 2021 வரை) ரூ.78,000/- (ரூபாய் எழுபத்தெட்டாயிரம் மட்டும்), இரண்டாமாண்டு (2021-2022) முதுகலை தமிழ் பயிலும் 13 மாணவர்களுக்கு (சூலை 2021 முதல் மார்ச்சு 2022 வரை) ரூ.2,34,000/-மும் (ரூபாய் இரண்டு

இலட்சத்து முப்பத்து நான்காயிரம் மட்டும்) மற்றும் முதலாமாண்டு (2021-2022) பயிலும் 15 மாணவர்களுக்கு (சூன் 2021 முதல் மார்ச்சு 2022 வரை) ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) என மொத்தம் ரூ.6,12,000/-க்கு (ரூபாய் ஆறு இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5) மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.6,12,000/-ம் 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் பிற இனங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கத்திலிருந்து மேற்கொள்வதுடன் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202 பொதுக் கல்வி - 05 மொழி வளர்ச்சி - 102 இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும், இலக்கிய மேம்பாடும் - மாநிலச் செலவினங்கள் - AB சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு மானியங்கள் - 309 உதவித் தொகை - 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
IFHRMS (த.தொ.கு. 2202 05 102 AB 309 03)

6) மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினதிற்கான தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7) மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான பயனீட்டுச் சான்றிதழைப் பெற்று உரிய காலத்திற்குள் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.50082/நிதி (தவ(ம)செ)/2021, நாள் 22.11.2021-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
இயக்குநர்(மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.
இயக்குநர்(மு.கூ.பொ), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-113.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.

நகல்:

மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை)

அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

நிதி (தவ(ம)செ)/வ.செ.பொ I/II) துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி..

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

24/11/21

அரசு சார்புச் செயலாளர்

24/11/21